இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதம் இரு இதழ் — 464 ● 1995 செப்டம்பர் 15 வெள்ளிக்கிழமை

உள்ளே:

★ இனவெறி பாசிச கூச்சல்களையிட்டு எச்சரிக்கையாக இருங்கள்! பக்கம் 2

★ கேதொழில் உரிமை பேண அனைத்துலக பிரச்சாரம் பக்கம் 3

★ தொழில், வாழ்க்கைத் தரத்தை நசுக்கும் இன்னொரு யுத்தம் பக்கம் 4—5

# விசேட அதிரடிப் படை படுகொலைகளின் எதிர்ப்புரட்சி சமிக்கைகள்

கடந்த மே — ஆகஸ்ட் காலப் பகுதியுள் 21 தமிழ் இளைஞர்கள் காட்டுமிராண்டித்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டமை விசேட அதிரடிப் படையின் வேலை என்பது அம்பலமாகி உள்ளது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த ஈவிரக்கமற்ற படுகொலைகளை வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. இந்தப் படுகொலைகளுக்கான பொறுப்பில் இருந்து தலைதப்ப பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் செய்யும் முயற்சிகள் மோசடியானவை. தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் இந்த படுகொலை பற்றிய தகவல்களையும் இதற்குப் பொறுப்பானவர்களையும் அம்பலப்படுத்துவதன் மூலம் தம் எதிரில் வளர்ச்சிகண்டு வரும் ஆபத்துக்கு முகம் கொடுக்க தயாராக வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

ஆகஸ்ட் 30ம் திகதி இரகசிய பொலிஸ் விசாரணை தகவல்களை அறிவிப்பதற்கென நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய பொலிஸ் மா அதிபர் W.P. இராஜகுரு 1995 மே 31ல் இருந்து ஆகஸ்ட் 14ம் திகதிக்கு இடையேயான காலப்பகுதியில் பொல்கொடவாவியிலும் வத்தளை ஹாமில்டன் ஏரியிலும் அளவை மகாஓயா பாலத்தின் அருகேயும் தியவன்னா வாவியிலும் மூழ்கடிக்கப்பட்டிருந்த 21 சடலங்கள் அகப்பட்டதாக கூறினார். இதில் 13 சடலங்கள் தமிழ் இளைஞர்களுடையது என இனங் காணப்பட்டுள்ளது. இவற்றில் 11 சடலங்கள் மகா ஓயாவில் கிடந்து கண்டெடுக்கப்பட்டன. அளவையில் இருந்து ஐந்து சடலங்களும் வத்தளையில் இருந்து ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன, ஐந்து சடலங்கள் ஜயவர்தனபுர பாராளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்னா ஓடையில் கிடந்து கண்டுபிடிக்கப்பட்டன.

''அகப்பட்டது 13 சடலங்கள்'' இன்னும் எத்தனை பேர் கொலை செய்யப்பட்டு சுட்டுப் பொசுக்கப்பட்டார்களோ? சமரசப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து ஏப்பிரலில் இனவாத யுத்தம் மீண்டும் ஆரம்பமான நாளில் இருந்து கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இதில் நூற்றுக் கணக்கான தோட்டத் தொழிலாளர் இளைஞர்களும் அடங்குவர். இவர்களுள் நூற்றுக் கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டனர்.

## காட்டுமிராண்டித்தனம்

பொலிஸ் மா அதிபரும் விசாரணைகளுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரும் வெளியிட்ட தகவல்களின்படி இந்தப் படுகொலைகள் கொழும்பு பௌத்தலோக மாவத்தயில் உள்ள விசேட அதிரடிப்படை தலைமையலுவலகத்திலேயே நடைபெற்றுள்ளன, கொலைகளமாக தற்சமயம் பாவிக்கப் படாத ஒரு மலசலகூடம் பயன்பட்டுள்ளது. விசேட பிளாஸ்டிக் நாடாக்களை கழுத்தில் போட்டு இறுக்குவதன் மூலம் மூச்செடுக்க முடியாது செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இளைஞர்கள் இறந்ததும் கூரிய கத்திகளால் வெட்டி பிளாஸ்டிக் நாடாவை அகற்றி சடலங்களை மலசலகூடத்துள் வீசியுள்ளார்கள், சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட சமயத்தில் இடம்பெற்ற மரண விசாரணையின் போது இந்த அநியாயங்களுக்கு முகம் கொடுத்த இளைஞர்கள் பலநாட்களாக பட்டினி போடப்பட்டு காட்டுமிராண்டித் தனமான முறையில் கொல்லப்பட்டார்கள் எனவும் பின்னர் நீரோடைகளில் மூழ்கடிக்கப்பட்டார்கள் எனவும் தெரிய வந்தது.

பத்து விசேட அதிரடிப் படையினரும் இராணுவ கப்டன் ஒருவரும், 7 சிவில் உளவாழிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் கூறினார். அத்தோடு இக்கொலைகள் சம்பந்தமாக இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 10 பேர் இராணுவ காவலில் இருப்பதாகவும் தெரிகிறது.

இந்தக் கொலைகளுக்கு பலியான சிலர் வெளிநாடு செல்லவென 'லொட்சு'களில் தங்கியிருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் வத்தளை வீட்டில் தங்கியிருந்துள்ளார். ஏனையோர் பஸ்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் என்றே கைது செய்யப்பட்டனர். ஆனால் ''இவர்களின் விடுதலைப் புலிகள் இயக்க தொடர்பு பற்றி விசாரிக்கப்பட்டது என நான் நினைக்கவில்லை'' என பிரதி பொலிஸ் கா அதிபர் குறிப்பிட்டார்,

இவை ஜனாதிபதியின் கட்டளையின் பேரில் நியமனம் செய்யப்பட்ட விசேட இரகசியப் பொலிஸ் குழுவின் ''கண்டு பிடிப்புக்கள்'' ஆகும். விசாரணைக்கு உத்தரவிட்டவர்களும் விசாரணை நடாத்தியவர்களும், கொலைகாரர்கள் அனைவருமே அரச இயந்திரத்தின் உச்சியில் இருப்போர். கொலைகாரர்களின் நிஜ இலக்கு பற்றி ''விசாரணையாளர்களின்'' அறிக்கைகள் மூலம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் திருப்திப்பட்டு விட முடியாது. இந்த படுபயங்கரமான கொலைகள் வடக்கு — கிழக்கிலும், தென் மாகாணங்களிலும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக என்ன வகையான காட்டுமிராண்டி வேலைகளுக்கு பிற்போக்குச் சக்திகள் தயாராகி வருகின்றன என்பதை அம்பலமாக்கி உள்ளது.

வடக்கு—கிழக்கில் இனவாத யுத்தத்துக்கும் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளுக்கும் முகம்கொடுக்கும் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் அவற்றில் இருந்து தப்பும் பொருட்டு தென் மாகாணங்களுக்கு வருகையில் அவர்கள் அரச படைகளாலும் கொலைகாரக் கும்பல்களாலும் கொலை செய்யப்படுகின்றனர். பொலிசும் இராணுவமும் விடுதலைப் புலிகளின் சதிகள் அம்பலமாகியுள்ளதாக தினமும் பிரச்சாரம் செய்தபடியே இந்த மனிதவேட்டைகளை நடாத்தி வருகின்றன. அரசாங்கம் கூறிக்கொள்ளும் அரசியல் தீர்வின் பின்னணியில் வடக்கிலும் தெற்கிலும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக எதிர்ப் புரட்சி இயக்கம் ஒன்று வளர்ச்சி கண்டு வருகின்றது.

அரசாங்கத்துக்கு ஜனநாயகத்திலும் மனித உரிமைகளிலும் உள்ள பற்றுதலினால் தான் படுகொலை விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொதுஜன முன்னணி தலைவர்களும் அரசாங்கத்துக்கு பந்தம் பிடிக்கும் பத்திரிகைகளும் கூறிக் கொண்டுள்ளன. இது முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்கும் கதையளப்பாகும் கொலையுண்டவர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில் பொதுமக்களின் கண்களில் மண்போடும் விசாரணைகளில் அரசாங்கம் இறங்கியது ஏன்? அரச படைகளையும் கொலைகார கும்பல்களையும் தட்டிக் கொடுத்துக் கொண்டு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை இயக்கத்துக்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பூசி மெழுகுவதே திட்டம்.

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் விசேட அதிரடிப்படையை கலைத்துவிடும் நோக்கம் உள்ளதா என பொலிஸ் மா அதிபரிடம் கேட்கப்பட்டது. ''இல்லை'' எனப் பதில் அளித்த அவர் பின்வருமாறும் குறிப்பிட்டார்: ''வி.அ.ப. கிழக்கு மாகாணத்தில் இராணுவம் இல்லாத இடங்களில் தலைசிறந்த பணியாற்றி வருகின்றது'' என்றார்.

செப்டம்பர் 7ம் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த அதிரடிப் படையின் கொலைகாரக் கும்பலை பின்வருமாறு பேணுவதில் ஈடுபட்டார், ''ஏனைய பாதுகாப்புப் படையினருடன் சேர்ந்து எஸ்.ரீ.எப். அங்கத்தவர்கள் தாய்நாட்டுக்கு உண்மையில் தம்மை அர்ப்பணம் செய்து கொண்டுள்ளனர். எல்லா இடங்களிலும் ''நாற்றம்'' கண்டவர்கள் இருந்து வருகின்றார்கள். ஆனால் அவர்களை தேடிப்பிடிக்க காலம் எடுக்கும். அவர்களின் 'பாவ கர்மத்தினால்' அமைப்பை அவமானத்துக்கு உள்ளாக்கி விடமுடியாது'' என ரத்வத்த குறிப்பிட்டார்

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஒரு கூட்டம் வேட்டை நாய்களின் மீது கொலைகளுக்கான பொறுப்பைச் சுமத்தவும் படுகொலை இயந்திரத்தின் இரத்தக் கறைகளை கழுவி எண்ணெய் தடவி முடுக்கி வைக்கவும் முயற்சிக்கின்றது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது, அரசாங்கம் கொலைகார யுத்தத்தில் மீண்டும் இறங்கியதோடு இந்தப் படுகொலைகள் இடம் பெற்றமை தற்செயலானதல்ல, வடக்கு—கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தமானது நாடு பூராவும் ஒடுக்குமுறையையும் பயங்கரத்தையும் முன்னெடுக்க அரசபடை அணிகளுக்கும் கொலைகாரக் கும்பல்களுக்கும் விடுக்கும் ஒரு அழைப்பாகும். தமிழ் முதலாளித்துவ பிரிவினைவாதிகளான விடுதலைப் புலிகள் தமது வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள இலங்கை முதலாளிகளுடன் யுத்தத்

(8ம் பக்கம்பார்க்க)

## வடக்கு — கிழக்கில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேற்று!

# இனவெறி-பாசிச கூச்சல்களையிட்டு எச்சரிக்கையாக இருங்கள்

**எண்ணம்**

சிங்கள இனவாதிகளும் பாசிசக் கும்பல்களும் இன்று தொடங்கியுள்ள வெறிபிடித்த இனவாதப் பிரச்சாரங்களையிட்டு தொழலாளர், ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கையாக இருக்குபடி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகிறது. இவர்கள் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பயங்கரங்கள் மூலம் நாடு முழுவதிலும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஒரு எதிர்ப் புரட்சி இயக்கத்தினை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த இனவாத — பாசிசக் கும்பல்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள ''அதிகாரப் பரவலாக்கல்'' திட்டத்தினை தமது இனவெறிக் கூச்சல்களுக்கான நாதமாக்கி கொண்டுள்ளனர், பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கு—கிழக்கு யுத்தத்தினை உக்கிரமாக்கிக் கொண்டுள்ளதை இந்த வெறியர்கள் நன்கு அறிவர். யுத்தத்தின் இலக்கு வடக்கு—கிழக்கு மாகாணங்களை அரசாங்கத்தின் ஆளுமையின் கீழ்க் கொணர்வதே எனவும் இவர்கள் அறிவர். அதிகாரப் பரவலாக்கல் யோசனை எனப்படுவது விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் யுத்தத்தினை மேலும் ஆழமாக்கவே முன்வைக்கப் பட்டுள்ளது என அரசாங்கத் தலைவர்கள் பல தடவைகள் குறிப்பிட்டும் உள்ளனர்.

''அரசாங்கம் நாட்டை பிரிக்கப் போகிறது'' எனக் கூச்சல் போடும் இனவாதிகளும் பாசிசக் கும்பல்களும் யுத்தத்தினை மேலும் மேலும் உக்கிரமாக்கு! தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவிதமான ஜனநாயக உரிமைகளையும் வழங்காதே! என்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ''அதிகாரப் பரவலாக்கல்'' தீர்வு பற்றிய கலந்துரையாடல் என்ற பேரில் அரசாங்கம் இந்த இனவாத, பாசிச கும்பல்களின் பிரச்சாரங்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது, இலங்கையின் முன்னணி முதலாளித்துவப் பத்திரிகைகளும் ரூபவாஹினியும் இனவாத—பாசிச பிரச்சாரங்களை முன்னெடுப்பதில் முன்னணியில் நின்று கொண்டுள்ளன, இலங்கையின் படுபிற்போக்கு இனவாதிகளும் பாசிஸ்டுகளும் ரீஎன்எல் தொலைக்காட்சி சேவையில் 'தீர்வு' பற்றிய கலந்துரையாடல் என்ற பேரில் இத்தகைய இனவெறிக் கூச்சல்களில் ஈடுபட்டுள்ளனர். திவயின, ஐலன்ட், லங்காதீப பத்திரிகைகள் பல்வேறு சம்பவங்களையும் தூக்கிப் பிடித்து தமிழர் விரோத இனவெறி கதையளப்புக்களை கொண்டு பத்திரிகைகளை நிறைத்து விற்பனை செய்கின்றன.

மாபெரும் 'தேசபக்தர்கள்' என்ற பேரில் இனவாதத்தைக் கக்கும் இவர்கள் யார்? இவர்கள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களினை இரத்தம் சிந்த வைத்து கசக்கிப் பிழியும் ஏகாதிபத்திய கைக்கூலி முதலாளிகள்; யூ.என்.பி—சி.ல.சு.க முதலாளிகளின் எடுபிடிகள் ஆவர். இவர்கள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை கொன்று தள்ளி, தொழிலாளர் அமைப்புக்களை தாக்கி, முதலாளிகளை சுற்றி வட்டமிடும் கொலைகார பாசிஸ்டுகள். இவர்களின் இந்த 'தேசபக்தி' எங்கிருந்து பெருக்கெடுக்கின்றது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

ஜே.வீ.பி.யில் இருந்து பிரிந்து 'ஜனதா மித்துரோ' என்ற பேரில் இயங்கும் பாசிசக் கும்பலின் தலைவரான சம்பிக ரணவக என்ற பேர்வழியால் எழுதப்பட்டு 'திவயின' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''இனியும் மக்களை ஏமாற்ற முடியாது. இனி மக்களின் நிலைப்பாடு பொறுத்தது போதும்! ஏமாந்தது போதும்! யுத்தம் செய் என்பதாக இருக்க வேண்டும்... அதற்கு புதிய பஞ்சசீல கொள்கையை மக்கள் இனங்காண வேண்டும், அதாவது அரசியல் தேவைகளின் மேலாக மக்களின் தேவையையும். தாயகத்தின் சுதந்திரத்தையும் தூக்கிப் பிடிக்கும் ஜனநாயகக் கூட்டு!''
(திவயின 1995 ஜூலை 27-28)

பாசிஸ்டுகள் சொல்வது இதுதான்: தேசத்தைக் காக்கும் பேரில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தினை சிந்த வைக்கும் இனவாதக் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு 'தேசிய கூட்டு' என்ற பேரில் முதலாளிகளின் பின்னால் அணிதிரளுங்கள்! ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளின் தேவைகளுக்கு தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் நலன்களைக் கீழ்ப் படுத்து! இதை எதிர்ப்போரை 'தேசத்துரோகிகள்' எனப் பெயர் சூட்டி ஒழித்துக் கட்டு! இந்த விதத்தில் முதலாளிகளின் அவசியங்களை பாசிஸ்டுகள் வாந்தி எடுக்கின்றனர்.

ஜே.வீ.பி. காரர்கள் இனவாதத்தினை ஒரு வினோதமான பாணியில்-ஜனநாயகத்தின் பேரில் வாந்தி எடுக்கின்றனர். அவர்களின் 'நியமுவா' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை கூறுவது இதுதான்; ''நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது இலங்கையில் ஜனநாயகத்தை அமைப்பது தொடர்பான ஒரு விடயமாதலாலும் அதிகாரப் பரவலாக்கம் இலங்கையின் தேசியப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட ஒரு விடயமாதலாலும் இவ்விரு தீர்க்கமான காரணங்களையும் ஒருங்கே கொண்டு மக்களின் தீர்ப்புக்கு விடுவது உசிதமற்றது.''
(1995 ஆகஸ்ட் 01)

(7ம் பக்கம் பார்க்க)

# தோட்டத் துறையில் தனியார்மயத்துக்கு எதிரான போராட்டம்

பொதுஜன முன்னணி அரசாங்கம் தோட்டத் துறையின் தனியார்மயத்தை விரைவுபடுத்தி உள்ளதோடு தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு மோசடியான விதத்தில் தோட்டங்களை விலைக்கு வாங்கும் முதலாளித்துவ கம்பனிகாரர்களுடன் 'கோபரேட்வாத' உறவுகளை இறுக்கமாக்கும் விதிமுறைகளை தேடி அலைகிறார்கள்.

தோட்டங்களை ஒவ்வொன்றாக விற்பனை செய்யும் நடவடிக்கை இன்னும் ஒரு சில தினங்களில் ஆரம்பமாக உள்ளது. செப்டம்பர் 22ம் திகதி பொகவந்தலாவ, கொட்டகலை தோட்டக் கம்பனிகளின் பங்குகள் கொழும்பு பங்குமுதல் சந்தையில் விற்கப்படவுள்ளன. பொகவந்தலாவை கம்பனிக்கு சொந்தமாக 13 தேயிலை தோட்டங்களும் 11 இறப்பர் தோட்டங்களும் உள்ளன. அத்தோடு இறப்பர், தேயிலை இரண்டும் கூட்டாக பயிர் செய்யும் 4 தோட்டங்கள் சொந்தமாக உள்ளன. இவற்றின் பரப்பளவு 18220 ஹெக்டயர்கள் ஆகும்.

முதலாளித்துவ முதலீட்டாளர்கள் தோட்டத் துறையை தனியார்மயமாக்குவதுடன் சேர்த்து நடைமுறைக்கிடும் வேலைத்திட்டங்கள் ஏற்கனவே தயார்செய்யப்பட்டுவிட்டன. இல்லையேல் அதற்கு வித்திடும் திட்டங்கள் தயாராகி வருகின்றன. இத்தோட்டங்களை விலைக்கு வாங்கும் கம்பனிகள் தாம் இலாபம் கறக்கும் விதத்தில் தோட்டத் துறையை முழு அளவில் மறு சீரமைப்பு செய்ய உள்ளன.

இந்த விதத்தில் இலாபம் தரும் தேயிலை, இறப்பர், தெங்கு தோட்டங்களில் மட்டுமே பயிர்ச் செய்கை இடம் பெறும். எனினும் தோட்டத் துறையை முழுப்படியே பல்வின பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவது முதலாளிகளின் திட்டமாக உள்ளது. HDF பங்குமுதல் ஆய்வு கம்பனியின் ஆய்வறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

''தோட்டத் துறையின் அபிவிருத்தியை பற்றி நிலவும் வரையறுக்கப்பட்ட நம்பிக்கை வைக்கக் கூடிய நிலைமையினுள் தோட்டங்களின் இன்றைய வடிவத்தினுள் உச்சப் பலனை ஊர்ஜிதம் செய்ய முடியாது என்பது தெளிவு''. உள்நாட்டுப் பாவனைக்கான மரக்கறிகள், ஏற்றுமதிக்காக நல்ல பழவகைகள் ஹோட்டல் நிறுவுதல், கோல்ப் விளையாட்டுத் திடல் ஆகியன இவ்விடங்களில் மாற்றுத் திட்டமாக அறிமுகம் செய்யப்படும் என இப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்டப் பயிர் நிலங்களில் நூற்றுக்கு 23—30 வீதம்— 71000 ஹெக்டேயர்-காட்டு நிலம் எனவும் இன்றைய நிலையில் இவற்றைப் பயன்படுத்த முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நூற்றுக்கு 10 வீத பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்த முடியாது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு தேயிலை உற்பத்தயும் கூட CTC முறைக்கு மாறிச் செல்ல வேண்டும் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்சமயம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சீடீசி தேயிலையின் அளவு நூற்றுக்கு 3 வீதமாகும். அது 2000 ஆண்டளவில் 50 வீதமாக அதிகரிக்கும். அத்தோடு 1995—98 காலப்பகுதியினுள் தேயிலையின் விலை 1.99—2.25 டாலருக்கும் இடைப்பட்டதாக இருக்கும் என உலக வங்கி கணக்கிட்டுள்ளது. பொது விலை மட்டம் 1970பதுகளின் விலை மட்டத்தின் அரைப்பங்குக்குச் சமமானது.

## ஏகாதிபத்திய உதவி

இத்திட்டத்தினை அமுல் செய்யும் பொருட்டு ஆசிய அபிவிருத்தி வங்கி ஜேர்மன் GTZ, ஜப்பான் ஓஈசிஎப் ஏஜன்சிகள் 12 கோடி டாலர்களை கடனாக வழங்க உள்ளன. தனியார்மயத்தின் மூலம் தோட்டத்துறையை விடுவிப்பதோடு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்கள் உட்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகளை இங்கு ஊடுருவ வைப்பது முதலாளி வர்க்கத்தின் முக்கிய இலக்காகும்.

நாம் மேலே காட்டிய புள்ளி விபரங்களதும், திட்டங்களதும் அர்த்தம் என்ன? இலாபம் கறப்பதை இலக்காகக் கொண்ட முதலீட்டாளர்கள் தொழிலாளர்களின் தொழில், வாழ்க்கைத் தரம், மற்றும் உரிமைகளை தவிடு பொடியாக்கும் தாக்குதல்களை நடைமுறைக்கிடுவது அம்பலமாகி உள்ளது.

தொழிற்சங்கங்களும் அவற்றின் அதிகாரத்துவங்களும் செய்யப் போவது என்ன? தொழிற்சங்கங்களில் பொரும்பான்மையானவை தனியார்மயத்தை அமுல் செய்யும் அரசாங்கத்தின் அப்பட்டமான ஏஜன்டுகள். இதொகா தலைவர்கள் தாம் தனியார்மயத்துக்கு ஆதரவளிப்பதாக திரும்பவும் கூறிக்கொண்டுள்ளார்கள், யூ.என்.பி, தொழிற்சங்கங்களின் நிலைப்பாடும் அதுவே. சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்த தொழிற்சங்கங்களையும் தேசிய தொழிலாளர் சங்கத்தையும் முக்கியமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள தோட்ட தொழிற் சங்க கூட்டமைப்பு தனியார்மயத்தை எதிர்பதாக பொய்க் கூச்சல்கள் போட்டு வருகின்றது. உண்மையில் இத்தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் முண்டுகோல்களாகும்.

தனியார்மயம் சம்பந்தமாக இந்தச் சங்கங்கள் அறிக்கை சமர்ப்பிப்பதாக கூறிக் கொண்டுள்ளன, எனினும் இவற்றின் முக்கிய நிலைப்பாடு தனியார்மயத்தை நிறுத்து என்பதல்ல, தனியார்மயம் இடம்பெறும் போது தொழிற்சங்கங்களை கலந்தாலோசிக்க வேண்டும். சங்கங்கள் கம்பனிகளுடன் கூட்டு உடன்படிக்கை செய்து கொள்ள வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதே இத்தொழிற் சங்கங்களின் நிலைப்பாடு. இத்துரோகந் தலைவர்கள் தனியார்மயம் சம்பந்தமான தொழிலாளர்களின் எதிர்ப்பினை கரைக்கவும் தோட்ட கம்பனிகளுக்கு தமது சேவையை வழங்கும் நிலைமையை சிருஷ்டிக்கவும் முயற்சிக்கின்றனர்.

இத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்களைத் தோற்கடிக்கும் போராட்டத்துக்கு தலைமைகளிடம் இருந்து ஆதரவு கிட்டாதது மட்டுமன்றி அவர்கள் தொழிலாளர்கள் ஆரம்பிக்கும் போராட்டத்தை சிதறடிக்க தம்மால் ஆனதையெல்லாம் செய்வர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தனியார்மயத்துக்கு எதிரான போராட்டத்துக்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் தெளிவான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும் என பு.க.க.வும் பெ.கை.தொ.ச.வும் வேண்டுகின்றன.

முதலாளித்துவக் கட்சிகளில் இருந்தும் முதலாளித்துவத்துக்கு வக்காலத்து வாங்

(8ம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க-அவுஸ்திரேலிய கேலொக் கம்பனி வேலைநீக்கம்:

# தொழில் உரிமை பேண அனைத்துலக பிரச்சாரம்

அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் தானிய பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இராட்சத கம்பனியான கேலொக் ஆகஸ்ட் நடுப்பகுதியில் 1075 பேரை அல்லது அதன் ஊழியர் படையில் 14 வீதத்தை வேலை நீக்கம் செய்துள்ளது. அனைத்துலக ரீதியான அதன் உற்பத்திச் செலவுக் குறைப்பு நடவடிக்கையின் ஒரு பாகமாகவே இதனைச் செய்துள்ளது. ஜூலையில் சிட்னியில் உள்ள அதன் பக்டரியில் 140 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்துள்ளது,

கேலொக்கின் இந்த வேலை நீக்கங்கள் பெரும் வர்த்தக நிறுவனங்கள் நடாத்திவரும் —தொழிலாளர் வர்க்கத்தின் தொழில் வாழ்க்கைத் தர வெட்டின் ஒரு பாகமாக இடம்பெற்றுள்ளது. வட அமெரிக்காவில் இருந்து ஐரோப்பா வரையில் கண்ணியமான சம்பள கொடுப்பனவுடனான தொழில்கள் வெட்டிக் குறைக்கப்பட்டு வருகின்றன,

அமெரிக்க வோல் ஸ்ரீட் பத்திரிகைகள் கேலொக்கின் புதிய தொழில் வெட்டுக்களை ஆர்வத்துடன் வரவேற்றதோடு அதன் பங்குகளின் விலைகளையும் 25 வீதத்தால் அதிகரிக்க வைத்துள்ளன. கேலொக்கின் அறிவிப்பைத் தொடர்ந்து இராட்சத மருந்து உற்பத்தி நிறுவனங்களான மிச்சிக்கன் அப்ஜோன் கோவும் சுவீடன் பார்மசியாவும் 13 பில்லியன் மூலதன இணைப்புக்கு உடன்பட்டுள்ளன. இதனால் உலகரீதியில் இந்நிறுவனங்களைச் சேர்ந்த 4000 தொழில்கள் அழிக்கப்படும்,

கேலொக் போன்ற ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் ஒரு உலகளாவிய மூலோபாயத்தை கடைப்பிடிக்கின்றன. நல்ல சம்பளத் திட்டத்துடன் கூடிய தொழில்களை அழிப்பதோடு நீண்ட காலப் போராட்டத்தின் மூலம் தொழிலாளர் வர்க்கம் வென்றெடுத்த சம்பள மட்டங்களையும் வாழ்க்கை நிலைமைகளையும் நாசமாக்க முயல்கின்றன, அவை கணனியிலும் தொலைத் தொடர்பு முறைகளிலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைப் பயன்படுத்தி உற்பத்தியையும் விநியோகத்தையும் ஒழுங்கு செய்கின்றன. இதனால் வெறும் தேசிய மட்டத்திலான உற்பத்தி, விநியோகங்கள் காலவதியானவையாக மாறியுள்ளன. இது அவை உற்பத்தியை உலகின் ஒரு பகுதியில் இருந்து மறுபகுதிக்கு மலிவான உழைப்பைத் தேடி நகர்த்துவதற்கு உதவுகின்றது.

## தேசிய பிளவுகள்

சகல நாடுகளிலும் இவை உழைப்பை சுரண்டும் அதே வேளையில் தொழிலாளர் இடையே தேசிய பிளவுகளையும் தூண்டி விடுகின்றன. அந்த விதத்தில் கேலொக் சிட்னியில் உள்ள அதன் தொழிலாளர்களிடம் வேலைத்துரிதப்படுத்தலையும் சம்பள வீழ்ச்சியையும் ஏற்றுக்கொள்வதன் மூலம் அவுஸ்திரேலிய தொழிற்பாட்டின் இலாபத்தை உயர்த்த வேண்டும் எனக் கூறுகின்றது, இதற்கு இணங்க அவர்கள் மறுப்பின் கம்பனி உற்பத்தியை அதிக தியாகத்துக்கு தொழிலாளர் தயாரான ஒரு இடத்துக்கு – அமெரிக்காவுக்கோ அல்லது வேறு ஒரு நாட்டுக்கோ நகர்த்தப் போவதாக மிரட்டுகின்றது.

இந்த அனைத்துலக கம்பனி மிரட்டல்களுக்கான ஒரு நல்ல உதாரணமாக சிட்னியில் உள்ள கேலொக் நிர்வாகம் பட்டில் கிறீக் பக்டரியை மூடிவிட அறிவித்துள்ளதாக தொழிலாளர்களிடம் தெரிவித்தது.

இப் பிரச்சினை தொழிலாளர் இயக்கத்தின் தலைமையினதும் மூலோபாயத்தினதும் நெருக்கடியை எடுத்துக் காட்டியுள்ளது. தொழிற் சங்கங்களும் பழைய தொழிலாளர் அமைப்புக்களும் மூலதனத்தின் உலகளாவிய தாக்குதலின் எதிரில் தொழிலாளர் வர்க்கத்தை கைவிட்டுள்ளன, அவை எந்தவிதமான எதிர்த் தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபடாததோடு சம்பள வெட்டு, வேலைநீக்கங்கள், வேலை துரிதப்படுத்தல்களுக்கு உத்சாகத்துடன் ஆதரவளிக்கின்றன. அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் உள்ள கேலொக் தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைமைகள் கம்பனியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளமைக்கான விலையைச் செலுத்த நேரிட்டுள்ளது. தொழிற்சங்கத் தலைமையின் துரோகத்தின் பின்னணியில் தேசியவாத வேலைத்திட்டத்தின் வங்குரோத்து இருந்து கொண்டுள்ளது.



அமெரிக்க பட்டில் கிரிக் தொழிற்சாலையில் கேலொக் தொழிலாளர்கள்

---

## இந்தியா:

# சென்னை மறியல் தடை செய்யப்பட்டதற்கு சோசலிசத் தொழிலாளர் கழகம் ஆட்சேபம்

இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இராணுவத்தினதும் பொலிசாரினதும் 'ஜனதா மித்துரோ' பாசிசக் கும்பலினதும் தாக்குதலுக்கு இலக்கானதைக் கண்டித்து இந்திய ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் சழகம் சென்னையில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் எதிரில் நடத்த இருந்த மறியலை தமிழ் நாடு ஜெயலலிதா அரசாங்கம் தடை செய்துள்ளது.

தமிழ்நாடு அரசாங்கம் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக வடக்கு—கிழக்கு மாகாணங்களில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்திவரும் இனவாத யுத்தத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசாங்கம் இந்த யுத்தத்தின் ஒரு பாகமாக தமிழ் அகதிகளுக்கு எதிரான பொலிஸ் அட்டூழியங்களை சென்னையிலும் மற்றும் இடங்களிலும் முடுக்கிவிட்டுள்ளதோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரான வேட்டையிலும் ஈடுபட்டுள்ளது.

சோ.தொ.க. செயலாளர் அருண்குமார் தமிழ்நாடு முதல் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள ஆட்சேபனைக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்; ''ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகம் இலங்கையில் உள்ள அதன் தோழமைக் கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாசிஸ்டுகளால் தாக்கப்பட்டதை எதிர்க்கும் விதத்தில் ஒரு மறியலை நடாத்தும் அடிப்படை ஜனநாயக உரிமையை நீங்கள் மறுத்துள்ளீர்கள், ஆனால் சரியாக நான்கு நாட்களின் பின்னர் —ஜூலை 14ல்— நீங்கள் முதலாளித்துவ இனவாதக் கட்சியான MDMK இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் எதிரில் மறியல் நடாத்த அனுமதி வழங்கியுள்ளீர்கள். அதைத் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக ஒரு தொகை முதலாளித்துவக் கட்சிகள் மறியல் நடாத்த அனுமதி வழங்கப்பட்டது.

''சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கு எதிரான இந்தப் பாரபட்சத்தை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்? சோ,தொ.க. ஒரு ட்ரொட்ஸ்கிசக் கட்சி என்பதையும் அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் நெருக்கமான அரசியல் உறவு கொண்டது என்பதையும் உங்கள் அரசாங்கம் நன்கு அறியும்.

''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கை அரசாங்கத்தின் சோவினிச கொள்கைகளுக்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் போராடும் ஒரு பெருமைமிக்க வரலாறு கொண்டது. அது சோ.தொ.க. உடன் சேர்ந்து உலக தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்ட தொழிலாளர்களை ஒன்றிணைக்க போராடுகின்றது. பு.க,க, இந்தியத் துணைக்கண்ட சோசலிச ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை-தமிழீழம் சோசலிசக் குடியரசினை அமைக்கப் போராடுகின்றது,

''அது கொழும்பு அரசாங்கத்தின் சிங்கள சோவினிசத்துக்கும் விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ தேசியவாதத்துக்கும் எதிராக இலங்கை இராணுவத்தை தமிழ் ஈழத்தில் இருந்து வாபஸ் பெறும்படி கோரிப் போராடுகின்றது. தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் பயங்கர விளைவுகளை பு,க.க. அம்பலப்படுத்தி உள்ளது,

''கொழும்பு அரசாங்கத்துக்கு நீங்கள் வழங்கும் ஆதரவு உங்கள் அரசாங்கம் பிரதிநிதித்துவம் செய்கின்றதும் பேணிக் காக்கின்றதுமான முதலாளி வர்க்கத்தின் நலன்களை பேணுவதை அடிப்படையாகக் கொண்டது. தமிழீழத்தில் இருந்து வந்து தமிழ் நாட்டில் வாழும் அகதிகளை நீங்கள் உணவு, வைத்திய உதவி, கல்வி, வீட்டுவசதி தொடர்பாக மிருகத்தனமான முறையில் நடாத்துவது இந்திய சோவினிசத்தை அடிப்படையாகக் கொண்டது, இது இந்திய தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அதன் இலங்கை—தமிழீழம் வர்க்க சகோதரர்களிடமிருந்து பிரிக்கும் அவஸ்தை நடவடிக்கையினை அடிப்படையாகக் கொண்டது.

''சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே எமது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக இலங்கை தோழர்களுக்கு எதிரான அரசினதும், பாசிசக் குண்டர்களதும் தாக்குதல்களுக்கு எதிரான அரசியல் பிரச்சாரத்தினை தீவிரமாக்கும் பேச்சு, பத்திரிகை சுதந்திரங்களையும், மறியல் செய்யும் உரிமையையும் பிரயோகிக்க எமக்குள்ள ஜனநாயக உரிமையை பறிக்க தங்கள் அரசாங்கமும் பொலிசாரும் எடுக்கும் முயற்சிகளும் இளகிய விதத்தில் கணக்கெடுக்கப்படமாட்டாது'' எனவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தோழர்.அருண்குமார்

# தொழில், வாழ்க்கைத் தரத்தை

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் மூலம் கிளறி விடப்பட்டுள்ள இனவாத வெறியினதும் இனவாத யுத்தத்தினதும் பின்னணியில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நசுக்கித் தள்ளும் யுத்தத்தினை ஒரு புதிய மட்டத்துக்கு உக்கிரமாக்கி உள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் இன்னும் சில தினங்களில் தொடுக்கவுள்ள ஒரு காட்டுமிராண்டித் தாக்குதலாக தோட்டத் துறையின் முழு அளவிலான தனியார்மயம் விளங்கும். தோட்டத் தொழிலாளர்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக கடந்த யூ.என்.பி. அரசாங்க காலத்தில் அது சரிப்பட்டு வரவில்லை. பிரேமதாச அரசாங்கம் தொழிற்சங்கத் தலைவர்களின் சம்மதத்துடன் தோட்ட நிர்வாசத்தினை தனியார்மயமாக்கியமை இதற்கான முதற்படியாக விளங்கியது. இப்போது பொதுஜன முன்னணியின் வாலில் தொங்கும் சகல தொழிற்சங்கத் தலைவர்களதும் முண்டு கோலுடன் தனியார் கம்பனிகளுக்கு தோட்டங்களை விற்றுத் தள்ளுவது தொடங்கி உள்ளது.

அரச நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக் குழுவின் பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியான தகவல்களின் படி முதலில் பொகவந்தலாவ, கொட்டகலை தோட்டக் கம்பனிகளின் தலா 40 இலட்சம் பங்குகள் விற்றுத் தள்ளப்படவுள்ளன, கொழும்பு பங்குமுதல் சந்தையில் செப்டம்பர் 20ம் திகதி இவை ஏலத்தில் விடப்படும். அங்கு ஒவ்வொரு தோட்டக் கம்பனியினதும் 16 இலட்சம் பங்குகள் — உயர்ந்தபட்சம் 1000 பங்குகள் என்ற அடிப்படையில்—ஏலத்தில் விடப்படும், எஞ்சிய பங்குகளில் நூற்றுக்கு 51 வீதம் இத்தோட்டங்களை இன்று நிர்வகிக்கும் கம்பனிகளுக்கு அல்லது வெளியார் கம்பனிகளுக்கு விற்றுத் தள்ளப்படும்,

அடுத்து அக்டோபரில் அகலவத்தை, கேகாலை தோட்டக் கம்பனிகளின் பங்குகள் ஏலத்தில் விடப்படும். ஆண்டின் இறுதியில் முழுத் தோட்டத் துறையையும் தனியார் துறைக்கு பலியிடுவதே முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் திட்டம்.

இதனால் தோட்டத்துறையில் வாழும் 7 இலட்சம் தொழிலாளர்களும் 10 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர் சனத்தொகையினரும் தனியார்மயத்தினால் படுமோசமான அழிவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கும், தோட்ட மறுசீரமைப்புக்கான சிபார்சுகளை முன்வைக்கும்படி நியமனம் செய்யப்பட்ட ஜயந்த கெலேகம கமிட்டியும், கம்பனிகளும், நிர்வாகிகளும் கூறுவது என்ன? உற்பத்திச் செலவு விற்பனை விலையைத் தாண்டிச் சென்றுள்ளதால் இலாபம் சம்பாதிக்க முடியாது தோட்டத்துறை வங்குரோத்தடைந்துள்ளது, உற்பத்திச் செலவில் முக்கால் பங்கு அல்லது அதிலும் அதிகமானது உழைப்புச் செலவாகச் செல்வதால் உழைப்புச் செலவைக் குறைக்காமல் இலாபம் சம்பாதிக்க முடியாது. இதுதான் ஆளும் வர்க்கத்தின் இன்றைய நிலைப்பாடு, தோட்டத் துறையை கட்டி எழுப்பும் தோரணையில் உலக வங்கி கடந்த பல வருடங்களாக தோட்டத் துறையை தனியார்மயமாக்கும்படி இலங்கை அரசாங்கத்தினை நெருக்கி வந்தது.

இந்த தனியார்மயம் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் சட்டிக்குள் இருந்து அடுப்பிற்குள் விழும் நிலை ஏற்படும். இலட்சக் கணக்கானோரை வேலை நீக்கம் செய்வது, சிறிய எண்ணிக்கையானோரிடம் உயிர்போகும் மட்டும் வேலை வாங்குவது, சம்பள வெட்டு, பெயரளவில் இருந்து வரும் சுகாதார வசதிகளை துடைத்துக் கட்டுவது என்பன இப்புதிய திட்டத்தின் கீழ் இடம் பெறும்.

பல தலைமுறையாக தோட்டங்களில் நாகரீக வாழ்க்கை முறைக்கு எதுவிதத்திலும் பொருந்தாத லயின் அறைகளில் தொழிலாளர் முடங்கிப் போயுள்ளனர். ஆனால் அவர்களுக்கு நிலையான மாதச் சம்பளம் கிடையாது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சராக தோட்டத் தொழிலாளர்களை நெறிப்படுத்தச் செயற்பட்டு வரும் பீ.சந்திரசேகரன் சமீபத்தில் வெளியிட்ட தகவல்களின்படி 3 இலட்சம் தொழிலாளர்கள் தோட்டங்களில் வேலையில்லாமல் உள்ளனர். கடந்த 20 வருடங்களுள் ஒரு தோட்டக் குடும்பத்தின் வருமானம் நூற்றுக்கு 50 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது வீடில்லாப் பிரச்சினையால் அல்லோலகல்லோலப்படும் தொழிலாளர்கள் அயல் இடங்களில் குடிசை அமைத்துக் கொள்ளும் நிலையில் அவர்கள் நீதி மன்றங்களில் நிறுத்தப்படுகிறார்கள். அங்ஙனம் வழக்குகளில் மாட்டிக் கொண்ட தொழிலாளர் எண்ணிக்கை 3000. இத்தகைய தொழிலாளர் சனத்தொகையினர் இலாப வெறியால் அலையும் உள்நாட்டு, வெளிநாட்டு கம்பனிகாரர்களின் திட்டவட்டமான சுரண்டலுக்குள் தள்ளப்படும் போது அவர்களின் நிலைமை என்ன?

## காமினி திசாநாயக்க

வேலை துரிதப்படுத்தல் எவ்வளவு உக்கிரம் அடையும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டதும் தொழிலாளர் மீது திணிக்கப்படும் வேலை இலக்குகள் எந்தளவாய் இருக்கும்!

தோட்ட நிர்வாகம் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்படும் நிலையில் தொழிலாளர்கள் மீது திணிக்கப்படும் வேலை இலக்குகளை சற்று எண்ணிப் பாருங்கள். உலக வங்கியின் தோட்ட தனியார்மய திட்டத்தினை தயார் செய்த பிரேமதாச அரசாங்கத்தின் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் காமினி திசாநாயக்க ''அனாவசியமான மனித மூலப்பொருள் அகற்றப்பட வேண்டும்'' எனக் குறிப்பிட்டது தெரிந்ததே. தோட்டங்களில் இருந்து நீக்கப்படும் இலட்சக் கணக்கான மக்கள் வெளிநாட்டு, உள்நாட்டு கம்பனிகளிடம் இரண்டு செல்லாக் காசுக்கு வேலை தேடி சண்டை போடும் வேலையற்றோர் கியூவில் சேர தள்ளப் படுகின்றனர். ''அனாவசியமான மனித மூலப்பொருளை அகற்றுவதே'' இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் வேலைத் திட்டமாகும்.



வெலிஓயா தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்.

தோட்டத் துறையை விற்றுத் தள்ளும் பொருட்டு தொழிலாளர்களை குழப்பியடிக்கும் விதத்தில் முதலாளி வர்க்கமும் அரசாங்கமும் இனவாத சன்னியையும் தொழிற்சங்க தலைவர்களின் முண்டியையும் பயன்படுத்துகின்றது. தமிழ் பேசும் எண்ணற்ற தோட்ட இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துள்ளார்கள் என்ற புரளியைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் பயங்கரவாத தடைச் சட்டம் மூலம் அவர்களைக் கைது செய்வது இதன் ஒரு இலக்காகும்.

★ இதற்கிடையே 'ரெலிகொம்', மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் சபை அரச வங்கிகள் ஆகியவற்றை தனியார் மயமாக்க அரசாங்கம் கத்தியை உருவியுள்ளத.

★ பாண் உதவி மானியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் அரசாங்கம் திட்டம் தீட்டியுள்ளது. 700 கோடி ரூபா பாண் உதவி மானியத்தை தொடர்ந்தும் செலவிட முடியாது எனவும் நெல் விற்பனை ஆகாததனால் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தைப் போக்க மாவு உதவிமானியத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும், அரசாங்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் கூச்சலிட்டு வருகின்றன,

★ பஸ், புகையிரத கட்டணங்களை அதிகரிப்பதன் மூலம் அரசாகங்ம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மேல் தாக்குதல் தொடுக்கவும் தயாராகி வருகின்றது. போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கமிட்டி பஸ் கட்டணத்தை 21% தினாலும், புகையிரத கட்டணத்தை 46% தினாலும் அதிகரிக்க சிபார்சு செய்துள்ளது,

## பன்னாட்டுக் கம்பனிகள்

இங்ஙனம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் குரல் வளையை நெரிக்கும் அதே வேளையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் இலாபகரமான உழைப்பையும் மூலப் பொருட்களையும் கொள்ளையடிக்க வெளிநாட்டு பன்னாட்டுக் கம்பனிகளை மேலும் மேலும் தருவிக்க முயன்று வருகின்றது, கடந்த மாதத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் வரிச் சலுகைகளை அங்கீகரித்ததாக அறிவிக்கப்பட்டது. இதன்படி ''உயர்ந்த தொழில் நுட்பங்களை'' கொணரும் கம்பனிகளுக்கு 5 ஆண்டு வரிவிடுமுறையும் பங்கு இலாபங்களுக்கு வரிவிலக்கும் இறக்குமதியாகும் இயந்திரங்களுக்கு இறக்குமதி வரி விலக்கும் அளிக்கப்படும். அத்தோடு ஒரு வருடத்துக்கு வியாபார மொத்த விற்பனை வரியில் இருந்தும் விலக்கு அளிக்கப்படும். 10 கோடி டாலருக்கும் அதிகமான மூலதனத்துடன் வரும் நிறுவனங்களுக்கு 12 வருட கால வரி விடுமுறையும் 50 கோடியுடன் வருபவற்றுக்கு 15 வருட கால வரி விடுமுறையும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

அரசாங்கம் தனது இனவாத கூச்சல்களினால் மக்களின் கண்களில் மண் போடுவதன் மூலம் இந்த மக்கள் விரோத நடவடிக்கைகளை ஒன்றன் பின் ஒன்றாக அமுல் செய்யத் துடித்து வருகின்றது. அரசியல் தீர்வு யோசனைகள் எனப்படுபவற்றை முன்வைப்பதன் மூலம் அரசாங்க யுத்த பேரிகைகளுக்கு இனவாதக் கும்பல்களையும் பாசிச குண்டர்களையும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களையும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அமெரிக்கா தொடக்கம் பிரித்தானியா வரையிலான ஏகாதிபத்திய சக்திகள் அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கும் 'தீர்வு' மோசடிக்கும் உத்வேகம் வழங்குவதன் மூலம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் தாக்குதல்களை பொதுஜன முன்னணி அரசாங்கத்தைக் கொண்டு நடைமுறைக்கிட்டு வருகின்றன, இனவாத யுத்தம் வடக்கு — கிழக்கு — தெற்கு மாகாணங்களின் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் தாக்குதலின் ஒரு பாகமாகும் என்பதை அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டம் தெளிவுபடுத்தி உள்ளது. 17 வருட கால யூ,என்.பி. அரசாங்கத்தின் கொலைகார ஆட்சியும் காட்டுமிராண்டித் தாக்குதலும் இந்த இனவாத கூச்சல்கள் மூலம் பூசி மெழுகப்பட்டுள்ளது.

தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் இந்த சூழ்ச்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது என தொழிலாளர் பாதை வேண்டுகின்றது. அவர்கள் தமக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள சகல தாக்குதல்களுக்கும் எதிராக வர்க்கப் போராட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

# நசுக்கும் இன்னொரு யுத்தம்

தோட்டத்துறையை விற்றுத் தள்ளும் நடவடிக்கைக்கு எதிரான போராட்டத்தை ஒழுங்கு செய்ய வேண்டும், அவ்வாறே ஏனைய அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கு எதிரான போராட்டத்தை இதனுடன் இணைக்க வேண்டும். இவை வாழ்க்கைத் தரத்தினை தவிடுபொடியாக்கும் தாக்குதல்களுக்கு எதிராகவும் உரிமைகளை காக்கவும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் இயக்கம் தனது பதாகையை உயர்த்த வேண்டியதன் அவசியத்தினை சுட்டிக் காட்டியுள்ளது.

## அடையாள வேலை நிறுத்தம்

தனியார்மயத்துக்கும் மற்றும் உரிமைகள் துவம்சம் செய்யப்படுவதற்கும் எதிரான போராட்டத்தினை ஒழுங்கு செய்வது எப்படி? தோட்டத் தனியார் மயத்துக்கு எதிராக ஜூலை 11ம் திகதி 4 இலட்சம் தொழிலாளர் பங்கு கொண்ட ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தினதும் வெலிஓயா தோட்டத் தொழிற்சங்க தலைவர்கள் வேட்டைக்கு எதிராக வெலிஓயாவையும் அதனைச் சுற்றிலும் உள்ள தோட்டங்களில் இருந்து 17,000 பேர் பங்கு கொண்ட வேலை நிறுத்தத்தினதும் படிப்பினைகள் புதியவை. அத்தோடு உயிர்ப் புஷ்டியானவை.

தோட்டத் தனியார்மயத்துக்கு எதிராக ஜூலை 11ம் திகதி முழு தோட்டத்துறையையும் சேர்ந்த தொழிலாளர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட போதிலும் தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு இதனை ஒரு வெறும் கண்துடைப்பாகவே ஏற்பாடு செய்திருந்தது. இக்கூட்டமைப்பு தனியார்மயத்துக்கு எதிரான போராட்ட வேலைத் திட்டத்தை முன்வைக்காததோடு வேலைநிறுத்தத்தை ஒழுங்கு செய்யவோ அல்லது தொழிலாளர்களை அணிதிரட்டவோ உருப்படியான எதையும் செய்யவில்லை, இதனால் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்து, வீடுகளில் முடங்கிக் கிடக்கத் தள்ளப்பட்டனர். தொழிலாளர் எதிர்ப்பினை துடைத்துச் செல்லும் பொருட்டு இத்தகைய ''அடையாள வேலைநிறுத்தத்துக்கு'' ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும் இந்தக் கூட்டமைப்பால் அந்த தனியார்மயத்தை தடுக்க முடிந்ததா? இல்லை.

யூ.என்.பி, ஆட்சிப் பீடத்தில் இருக்கும்வரை அதற்கு அடிபணிந்து தொழிலாளர்களின் கால்களைக் கட்டிப் போடச் செயற்பட்டு வந்த இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் பொதுஜன முன்னணியை ஆட்சிக்கு கொணர முழு மூச்சாக உழைத்தனர். அதுவும் யூ.என்.பி, ஆட்சிக்காலத்தில் செய்யாது போனதைச் செய்யவே இது ஆட்சிக்கு வரத் துடிக்கின்றது என்பதை அறிந்தறிந்தே அந்த ஆதரவை வழங்கினர்.

மலையக மக்கள் முன்னணி தலைவர் பீ.சந்திரசேகரன் தொழிலாளர்களின் உச்சியைப் பிழக்கும் திட்டங்களை தயாரிக்கும் அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் பதவியை ஏற்றுள்ளார், இ,தொ,கா. தலைவர் எஸ்,தொண்டமான் யூ என்,பி. தாக்குதல்களுக்கு முண்டு கொடுப்பதில் இருந்து இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல் வரையிலான அனைத்துக்கும் முழு ஆதரவு வழங்கினார், சந்திரசேகரனும் தொண்டமானும் ஜூலை 11ம் திகதிய அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள வேண்டாம் என தொழிலாளர்களை வேண்டிக் கொண்டனர். சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தொழிற்சங்கங்கள் இக்கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்தின் காட்டுமிராண்டி தாக்குதல்களை அமுல் செய்வதில் ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுப்பதில் சேர்ந்து கொண்டனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சமசமாஜ கட்சி தலைவர்களில் ஒருவரான அதாவுத செனவிரத்ன என்ற பெருந் தோட்டக் கைத்தொழில் பிரதி அமைச்சர் தொழிற் சங்கங்களை கூட்டி இந்த தனியார்மய தீர்மானத்தை அவற்றுக்கு அறிவித்தார், தொண்டமானுடன் தொழிற்சங்க சொத்துப் பத்துக்காக மோதிக் கொண்டு 'புதிய இலங்கை தொழிலாளர் காங்கிரசை' அமைத்துக் கொண்டுள்ள எம். எஸ். செல்லச்சாமி யூ,என்.பி.யின் தனியார்மயதிட்டத்தினை தொழிலாளர் மேல் திணிப்பதில் அன்றே முன்நின்றவர் என்பது தெரிந்ததே.

இந்தச் சகல துரோகத் தலைவர்களும் இணைந்து யூ.என்.பி.யிடம் விடுத்த கோரிக்கை என்ன தெரியுமா? உலகளாவிய ரீதியில் ''ரென்டர்'' கோருவதன் மூலம் தோட்டங்களை ''நல்ல'' கம்பனிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே. வெலிஓயா தொழிற்சங்க தலைவர்கள் வேட்டையாடப்பட்டதை எதிர்த்து தொழிலாளர்கள் பல தினங்களாக நடாத்தி வந்த போராட்டத்தினை தொழிற்சங்கத் தலைமைகள் தோட்ட நிர்வாகிகளதும் தொழில் ஆணையாளரினதும் நிபந்தனைகளுக்கு அடிபணிந்ததன் மூலம் காட்டிக் கொடுத்தனர்.

ஏகாதிபத்திய கையாட்களதும் பொதுஜன முன்னணி—யூ என்.பி. கைக்கூலிகளதும் தலைமையில் தனியார்மயத்துக்கு எதிரான போராட்டம் ஒரு போதும் இடம் பெறவே மாட்டாது,. இவர்கள் தொழிலாளர்களை கூறு போட்டு குழப்பியடிக்க திட்டமிட்டுச் செயற்படும் அலுகோசுகள். ஏனைய அரச நிறுவனங்களின் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே அணு அளவு வேறுபாடும் கிடையாது. தொழிற்சங்கத் தலைவர்களும் சமசமாஜ—கம்யூனிஸ்ட் — நவ சமசமாஜ கட்சித் தலைவர்களும் தொழிலாளர் —ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை தட்டிப் பறிக்கும் முதலாளித்துவ தரகர்களாக மாறியுள்ளனர். இந்த துரோகத்தினை உடைத்து எறிய தொழிலாளர் வர்க்கம் புதிய வேலைத் திட்டத்துக்கும் புதிய தலைமைக்குமான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

★ தனியார்மயமாக உள்ள தோட்டங்கள், அரச நிறுவனங்களுள் உள்ளமர்ந்து கொண்டு வேலைநிறுத்தம் செய்ய வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்களை வேண்டுகின்றது. தனியார்மயம் வேண்டாம்! தொழில்களில் கைவைக்காதே!

★ தோட்டங்களதும் அரச நிறுவனங்களதும் கணக்கேடுகளை திறந்து காட்டு! - இவை நஷ்டம் கண்டதாலேயே அவற்றை தனியார் மயமாக்குவதாக முதலாளிகள் கூறுகிறார்கள். அதைப் பரீட்சிப்பதற்கான ஒரு வழி இக்கணக்கேடுகள் பரிசோதனையாகும். ஏகாதிபத்திய, தேசிய வங்கியாளர்களும் தனியார் கம்பனிகளும் நடாத்தும் சுரண்டல்களையும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் செய்து கொண்டுள்ள கட்டளைகள் என்ன என்பதையும் தொழிலாளர்கள் இக்கணக்கேடு திறப்பு மூலம் கண்டு கொள்ளலாம்.

★ உதவிமானியம் வெட்டு பஸ், புகையிரத கட்டண அதிகரிப்பை நிறுத்து! தனியார்மயத்துக்கும் நலன்புரி சேவைகள் வெட்டுக்கும், புகையிரத—பஸ் கட்டண அதிகரிப்புக்கும், தொழில் மற்றும் உரிமைகள் ஒழிப்புக்கும் எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை ஒன்றிணைக்க வேண்டும்.

துரோக தொழிற் சங்கத் தலைவர்களின் கை விலங்குகளை உடைத்துக் கொண்டு புதிய அமைப்புக்களை கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே இந்தப் போராட்டங்களை ஒழுங்கு செய்ய முடியும். சகல தோட்டங்களிலும் நிறுவனங்களிலும் தொழிலாளர்களின் நிஜ பிரதிநிதிகளைக் கொண்ட நடவடிக்கை குழுக்களை கட்டி எழுப்புமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது, பு,க.க. வினால் நிறுவப்பட்டு வரும் பெருந்தோட்டக், கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தில் சேரும்படியும் தொழிலாளர்களை நாம் வேண்டுகின்றோம். தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்கள் வேலைற்ற இளைஞர்கள் கல்விவெட்டுக்கு இலக்கான மாணவர்களைக் கொண்டு விஸ்தரிக்கப்பட வேண்டும்.

அத்தோடு அப்போராட்டங்களை அரச—குண்டர் தாக்குதல்களில் இருந்து காக்கும் பொருட்டு தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டிகளை நிறுவ முன்வரும்படியும் நாம் தொழிலாளர்கள்ள வேண்டுகின்றோம்.

## இனவாத யுத்தம்

இனவாத யுத்தமானது வடக்கு— கிழக்கு மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்குகின்றதும் தென்மாகாணங்களில் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களை அடக்கி ஒடுக்குகின்றதுமான முதலாளிகளின் இயக்கமாகும். விடுதலைப் புலிகளின் பிற்போக்கு நடவடிக்கைகளாலோ அல்லது சிங்கள முதலாளிகளதும் பாசிஸ்டுகளதும் இனவாத தாக்குதல்களாலோ தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் ஏமாந்து போகக் கூடாது. தமது உரிமைகள் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் இனவாத யுத்தத்துக்கும் இடையேயான உறவினை தென்மாகாண தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் கண்டு கொள்ள வேண்டும். யுத்தத்துக்கும் முதலாளி வர்க்கத் திட்டங்களுக்கும் முன்னுரிமை தரும் ஏகாதிபத்திய வாதிகளினதும் இப்பிராந்தியத்தில் இந்திய முதலாளிகளின் திட்டங்களதும் நிஜ அர்த்தத்தினை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும், அவர்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டம் முதலாளித்துவ அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிரான போராட்டத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. யுத்தத்துக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு அரசாங்கத்துக்கோ அல்லது முதலாளி வர்க்கத்தின் எந்த ஒரு பிரிவினருக்கோ, பின்னால இழுபட்டுச் செல்லும் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களால் அரசாங்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் எதிராகப் போராட முடியாது.

★ இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல. யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு சதமோ கொடாதே! வடக்கு—கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று! விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்தை நிராகரி! வடக்கு—கிழக்கு தமிழ் தொழிலாளர்களுக்கும் தென் மாகாண தொழிலாளர்களுக்கும் இடையே அனைத்துலகவாத ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தில் தனியார்மயத்துக்கும். நலன்புரி சேவை ஒழிப்புக்கும், வாழ்க்கைத் தர வெட்டுக்கும் வேலையின்மைக்கும் முதலாளித்துவ அமைப்பினுள் தீர்வு கிடையாது என்பதை எதுவித ஈடாட்டத்துக்கும் இடம் வைக்காமல் உறுதி செய்ய வேண்டும். இதற்கு அடிப்படை நிறுவனங்களை அரசமயமாக்குவதன் மூலமே தேசிய பொருளாதாரம் செழிப்படையும் எனக் கூறிய முதலாளிகளும், அது ஒரு சோசலிச நடவடிக்கை எனக் கூறிய சந்தர்ப்பவாதிகளும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் திரண்டு தமது கைகளாலேயே அந்த அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது நல்ல சாட்சி.

வீழ்ச்சிக்கு முகம் கொடுத்துள்ள ஏகாதிபத்திய முதலாளி வர்க்கம் இலாபகரமான உழைப்பையும், வளங்களையும தேடி. உலகம் பூராவும் அலைகின்றது. யுத்த முகாம்களை அமைக்கின்றது இலங்கை முதலாளிகளும், பொதுஜன முன்னணி அரசாங்கமும இந்த ஏகாதிபத்திய வாதிகளின் கைத்தேங்காயாகும்.

தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைகளைக் காக்க முதலாளித்துவ இவாப அமைப்பைத் தூக்கி வீசி, தொழிலாளர்—விவசாயிகளின் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர வேண்டும், அதன் மூலம் சகல அடிப்படைக் கைத்தொழில்களையும் தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் கொணர வேண்டும். இது ஏகாதிபத்திய அமைப்பைத் தூக்கி வீசும் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாகும். இதற்கு அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியத்தினைக் கட்டி எழுப்பும் போராட்டத்தின் ஒரு பாகமாக தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களை ஒன்றிணைத்து தமது போராட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கும் வேலைத்திட்டமும் முன்நோக்கும் இதுவே, இது இல்லாமல் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இன்று உக்கிரம் கண்டு வரும் தாக்குதல்களுக்கும், இராணுவ — பொலிஸ் சர்வாதிகார திட்டங்களுக்கும் பாசிச தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க முடியாது. சகல இடங்களிலும் இந்தப் புரட்சிக் கட்சியை நிறுவ வேண்டும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை புரட்சிக் கட்சியாக ஊர்ஜிதம் செய்ய இணையுமாறு நாம் நனவான தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களை வேண்டுகின்றோம்.

வாசியுங்கள்!

சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

— கீர்த்தி பாலசூரிய

விலை ரூபா 20/-

# ஏகாதிபத்தியவாதிகளின் உதவி கோரி விடுதலைப் புலிகள் பிரச்சாரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தின் உதவியை தம்பக்கம் வென்றெடுக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஏகாதிபத்தியவாதிகள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேரில் காட்டும் அக்கறை விடுதலைப் புலிகளை மனங்கலங்கச் செய்துள்ளது.

இலங்கையின் அரசியல் நெருக்கடியின் மத்தியில் பொதுஜன முன்னணியை ஆட்சியில் அமர்த்த மேற்கத்தைய ஆளும் வர்க்கங்களின் ஆதரவு கிடைத்தது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமரசத்தை உருவாக்க இடம்பெற்ற பெரும் முயற்சிகளில் ஏகாதிபத்தியவாதிகள் முன்னணியில் நின்றனர், இரு தரப்பினருக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் உடைந்து போனதன் பின்னர் பொதுஜன முன்னணி இனவாத யுத்தத்தினை ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஏகாதிபத்திய அரசாங்கங்கள் அதற்கு அப்பட்டமான ஆதரவு வழங்கின. இன்று அரசாங்கம் முன்வைத்துள்ள 'அரசியல் தீர்வு யோசனைகள்' அவர்களின் அங்கீகாரத்துடன் தயார் செய்யப்பட்டவை.

இன்று இலங்கையில் நிலவும் வர்க்க நிலைமையினுள் தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளவும் இச்சந்தர்ப்பத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை நல்லதும் அவசியமுமான ஒரு ஆயுதமாக ஏகாதிபத்தியவாதிகள் கருதுகின்றனர். இலங்கையின் ஈடாட்டம் கண்ட அரசியல் நிலைமையினுள் சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கத்தினை தமது ஆணையின் கீழ் அணிதிரட்டிக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் தீர்க்கமான ஒரு கொடிய தலையீட்டுக்குத் தன்னும் தயாராக உள்ளனர்.

## உபாயம்

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஏதேனும் வசதிகள் வழங்குவதை இலங்கை ஆளும் வர்க்கத்தின் மீது தமது நெருக்குவாரத்தைக் கொணர்வதற்கான ஒரு உபாயமாக மேற்கத்தைய நாடுகளின் முதலாளிகள் கருதிவந்தனர். இன்று அந்த நிலைப்பாடு மாற்றம் கண்டமை — சிலவேளை அது தற்காலிகமானதாகவும் இருக்கலாம் — தமக்கு விழுந்த ஒரு அடியாக விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். இலங்கை முதலாளி வர்க்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களில் ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து கிடைத்த இந்த உதவியை விடுதலைப் புலிகள் ஒரு பக்கபலமாகப் பயன்படுத்தி வந்தது. இன்று நிலைமை மாறியுள்ளதால் அவர்களின் உதவியை தம்பக்கம் வென்றெடுக்க விடுதலைப் புலிகள் போட்டிப் பிரச்சார நடவடிக்கைகளில் குதித்துள்ளது.

## போட்டி பிரச்சாரம்

லண்டன், பாரிஸ், கோபன்கேகன், சூரிச், ஒஸ்லோ, பேர்ளின், டொரான்டோ, சிட்னி முதலான நகரங்களில் விடுதலைப் புலிகள் இந்த பிரச்சாரக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடாத்தியது, ஒரு சில தினங்களுக்கு முன்னர் பாரிசில் ஊர்வலமும் கூட்டமும் நடைபெற்றது. இவை எல்லாம் உதவி கிடைக்க வேண்டியது பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு அன்றி தமக்கே என ஏகாதிபத்தியவாதிகளுக்கு எடுத்துக் கூறுவதற்காகவே நடைபெற்றன.

பாரிஸ் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களில் ஒருவரான லோரன்ஸ் திலகர் மேற்கத்தைய நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி வழங்கும் அறிக்கைகளை வெளியிட்டமையையிட்டு வருத்தம் தெரிவித்தார், இலங்கை அரசாங்கத்துக்கு இராணுவ உதவி வழங்குவதால் ''எதுவித நன்மையும் கிட்டாது'' எனவும் ''அநேகமானவை இல்லாது போக நேரிடும்'' எனவும் மேற்கத்தைய நாடுகளுக்குப் புரிய வைக்க விடுதலைப் புலிகள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றது.

''இன்சயிட் ரிப்போர்ட்'' (Inside Report) என்ற விடுதலைப் புலிகளின் பத்திரிகையில் ''இனப் பிரச்சினையும் மேற்கத்தைய நாடுகளும்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது: ''அல்லல்படும் தரப்பினர் என்ற முறையில் தமிழ் தேசிய இனம் மேற்கத்தைய நாடுகளிடம் வேண்டுவது பிரச்சினையை சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்ள விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் ஊக்குவிக்க உபயோகமான நடவடிக்கை எடுக்கும்படியே. அங்ஙனம் இல்லாமல் பிரச்சினையை உண்மையில் நீடிக்கவும் பேரழிவுகளை ஏற்படுத்தவும் கூடிய விதத்தில் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதில் உத்சாகமாக பங்கு கொள்வது அல்ல''
(1995 ஜூன் 30)

விடுதலைப் புலிகள் ஏகாதிபத்திய மேற்கத்தைய நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் இராணுவ உதவிகளால் தமக்கு ஏற்படக் கூடிய தீங்குகளையிட்டு கலங்கிப் போயுள்ளனர். அவர்கள் ஏகாதிபத்தியவாதிகள் 'உபயோகமான நடவடிக்கை'' எடுப்பர் என நம்புகின்றனர்.

ஏகாதிபத்தியவாதிகள் அரைக் காலனித்துவ நாடுகளில் தமது செல்வாக்கை அதிகரிக்கும் பொருட்டு ''மனிதாபிமான உரிமைகளை காத்தல்'', ''சமாதானத்தை ஏற்படுத்தல்'' என்ற வாய்ச் சவடால்களை முன்வைத்தவாறு தலையீடு செய்கின்றனர், பொது சன முன்னணி அரசாங்கத்துடன் போட்டியிட்டவாறு விடுதலைப்புலிகள் அவர்களிடம் வேண்டுவதும் இலங்கையில் அமைதியை பேணத் தலையிடுங்கள் என்பதே. பின்வரும் கூற்று இதை நன்கு தெளிவுபடுத்துகிறது;

''அது மட்டுமல்ல மேற்கத்தைய நாடுகள் இலங்கையில் அமைதி ஏற்படுத்தப்பட வேண்டுமென மனப்பூர்வமாக விரும்பி வேண்டி அறிக்கை விடுத்துள்ளதுடன் சிற்சில நாடுகள் மோதலுக்கு முடிவுகட்ட தலையீடு செய்யவும் தயாராகவுள்ளன.''
(அதே பத்திரிகை)

விடுதலைப் புலிகள் மேற்கத்தைய ஆளும் வர்க்கத்தினரை மிகச் சிறந்த சமாதான தூதர் என்று புகழாரம் சூட்டுவதோடு அதன் தலையீட்டினால் ஓர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறது, தற்போது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இதுவே. அது ஏனைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களை போன்றே ஏகாதிபத்தியத்தின் அனுசரணையுடன் ஓர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் முட்டி மோதலாகும்—அது சில சமயம் வேறு ஓர் அரசாகவோ அல்லது அதை ஒத்த ஒழுங்கமைப்பாக அவர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய ஓர் பிரதேசம் நிச்சயமாக ஏகாதிபத்திய மலிவு உழைப்பு சுரண்டலுக்கான ஒழுங்கமைப்பு ஆகும்.

மேற்கத்தய முதலாளித்துவ ஆட்சியாளர் துடித்துக் கொண்டுள்ள நிலையிலும் கூட தமிழ் தேசியமுதலாளித்துவத்துக்கு வேறு மாற்றுத்திட்டமே கிடையாது. இதைத்தான் விடுதலைப் புலிகள் மீண்டும் நிரூபித்துள்ளனர். தமிழ் ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்காக போராடுகின்றோம் எனக் கூறிவந்த பொய் தற்போது முற்றாக அம்பலமாகியுள்ளது. விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ் முதலாளித்துவ கும்பல்களும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 'விடுதலையை' தேடிக் கொடுக்க அல்ல ஏகாதிபத்திய ஒடுக்குமுறையை திணிக்கவே முயல்கின்றனர்.

சிங்கள முதலாளி வர்க்கத்தின் இனவாத யுத்தத்தினை விடுதலைப் புலிகள் தமது ஏகாதிபத்திய தரகு வேலைத் திட்டங்களை நியாயப்படுத்தவும் மூடிமறைக்கவும் பயன்படுத்துகின்றனர்.

15 வருடங்களுக்கு மேலாக தமிழ் தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்கள் இரத்தக் களரி நிறைந்த நசுக்குதலையே கண்டுள்ளனர் அவற்றின் படிப்பினைகளை ஆய்வுசெய்வது அத்தியாவசியமாகும். தமிழ் முதலாளித்துவ தலைமைகள் தமது சலுகைகளை பேரம் பேச வட்டமேசையில் குந்துவதும் இந்திய ஆளும்வர்க்கம் அல்லது மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களிடம் மண்டியிடுவதுமே வழக்கமாகின. வடக்கில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை நசுக்கும் கொடிய அரச இயந்திரமாக இன்று கண்முன்னால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தொழிலாள வர்க்கம் சுயாதீன அரசியல் சக்தியாகி ஒடுக்கப்படுவோரின் அமைப்புரீதியான தலைமையாக போராடுவதால் மட்டுமே விடுதலை பெறுவது சாத்தியகும். சிறிலங்கா, இந்தியா, மற்றும் ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே தமிழ் தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளை தோற்கடித்து மிலேச்ச அழிவிலிருந்தும் விடுதலை பெறப் போராட முடியும். புலிகளின் பிற்போக்கு தேசியவாதத்திற்கு எதிராகத் போராட தமிழ் தொழிலாள வர்க்கம் தமது அரசியல் சுயாதீனத்துக்காக போராட வேண்டும்.

இதற்கு தமிழ் ஈழம், சிறீலங்கா தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசி அனைத்துலக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சிறீலங்கா—தமிழீழம் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை கட்டியெழுப்புவதன் மூலம் தமிழ் இனத்தின் ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட முடியும்,

சிறீலங்காவின் தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்கப் பொறுப்பும் செயற்பாடும் இந்த அரசியல் அபிவிருத்தியில் பெரும் முக்கியத்துவத்தை பெற்றுள்ளது, அவர்கள் இனவாத யுத்தத்திற்கு எதிராக தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை பேண முன்னணியில் நின்று வடக்கு—கிழக்கு தொழிலாளருக்கு தோழமைக் கரங்களை நீட்ட வேண்டும். அத்தகைய வர்க்க ஒருமைப்பாடின்றி, ஏகாதிபத்தியத்தையும், தரகு முதலாளித்துவத்தையும் தோற்கடிக்கும் விடுதலைப் போராட்டம் வெற்றியளிக்காது.

# ஏர்னஸ்ட் மண்டேல் 72 வயதில் மரணம்

40 வருடங்களுக்கு திரிபுவாத ஐக்கிய செயலகத்தின் பிரதான தலைவராக விளங்கிய ஏர்ணஸ்ட் மண்டேல் ஜூலை 20ம் திகதி பிரசெல்சில் உள்ள தமது வீட்டில் காலமானார், இறக்கும் போது அவருக்கு வயது 72. அவரது மனைவியின்படி மரணத்துக்குக் காரணம் இருதய கோளாறு.

1940ல் நான்காம் அகிலத்தின் பெல்ஜியம் பகுதியில் சேர்ந்த மண்டேல் இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாசி ஆக்கிரமிப்புக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தில் பங்குபற்றினார், யுத்தத்தின் பின்னர் அவர் பெல்ஜியம் பகுதியின் தலைவராகவும் அனைத்துலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் ஒரு பெரும் புள்ளியாகவும் மாறினார்.

1953ல் நான்காம் அகிலத்தின் அன்றைய செயலாளராக விளங்கிய மைக்கேல் பப்லோவின் தலைமையிலான திரிபுவாதப் போக்கின் மிகப் பிரபல்யமான ஆதரவாளராக மண்டேல் விளங்கினார். கிழக்கு ஐரோப்பாவிலும் சீனாவிலும் ஸ்டாலினிச ஆட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டமையானது ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஒரு புரட்சிகரப் பாத்திரத்தை வகிக்க முடியும் என காட்டிக் கொண்டுள்ளதாக இது கூறிக்கொண்டது,

மரபுவழி ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பேண அமெரிக்க ட்ரொட்ஸ்கிசத் தலைவர் ஜேம்ஸ்.பீ.கனனின் ஆரம்பிப்பின் பேரில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அமைக்கப்பட்டதை மண்டேல் எதிர்த்தார். பப்லோ அல்ஜீரிய தேசியவாதி பென் பெல்லா ஆட்சியின் ஆலோசகரான பின்னர் அனைத்துலக செயலகம் (International Secretariat) என அழைக்கப்பட்ட பப்லோவாத நிலையத்தின் தலைவராக இவர் மாறினார்.

ஐக்கிய செயலகம், கனனும் அமெரிக்க சோசலிச தொழிலாளர் கட்சியும் (SWP) 1963ல் அனைத்துலகக் குழுவில் இருந்து பிரிந்து மீண்டும் மண்டேலுடனும் பப்லோவாதிகளுடனும் இணைந்ததை தொடர்ந்து அமைக்கப்பட்டதாகும். 1990ல் சோ. தொ. க. அதில் இருந்து விலகியது உட்பட ஒரு தொகை பிளவுகள் அந்த அமைப்பினுள் ஏற்பட்ட நிலையில் மண்டேல் அதன் முக்கிய தலைவராக தொடர்ந்து விளங்கினார்.

மண்டேலின் வாழ்க்கையும் அரசியல் வரலாறும் பற்றிய ஒரு முழு ஆய்வு விரைவில் தொழிலாளர் பாதையில் வெளிவரும்.

### ஆயிரக் கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தனர்

# பொஸ்னிய சேர்பியர்களுக்கு எதிரான அமெரிக்க குண்டுவீச்சு அட்டூழியம்



யுத்தத்தில் தம் உறவினர்களை இழந்து கதறும் பொஸ்னிய பொதுமக்கள்.

பொஸ்னியாவில் சேர்பியர் வாழும் பகுதிகளில் அமெரிக்க அரசாங்கம் நடாத்திய குண்டுவீச்சுக்களை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. ஐக்கிய நாடுகள் சபை பிரேரணைகளதும் நேட்டோவினதும் உடன்படிக்கைகளின் கீழ் இடம் பெறுவதாகக் கூறிக் கொண்டு அமெரிக்க விமானங்கள் பாதுகாப்பற்ற பொதுஜனங்கள் மீது மரணத்தையும் பேரழிவையும் பொழிந்து கொண்டுள்ளன.

இது இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் அமெரிக்கா நடாத்தும் ஒரு பிரமாண்டமான குண்டுவீச்சு என்பது குறிப்பிடத்தக்கது. ஆகஸ்ட் 31ம் திகதி இந்தத் தாக்குதல்கள் ஆரம்பித்ததில் இருந்து அமெரிக்க கடற்படை, விமானப் படை விமானங்கள் பொஸ்னியா மீது 2000 எதிர்த் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. நான்கு நாள் ஓய்வின் பின்னர் செப்டம்பர் 5ம் திகதி மீண்டும் ஆரம்பமான விமானத் தாக்குதல்கள் சரஜீவோவில் இருந்து மொத்தம் 70 பொஸ்னிய பிராந்தியங்களில் இடம் பெற்றுள்ளன. இவை உணவு, மருந்து விநியோகங்களை கொணர பயன்படுத்தும் பாலங்கள் மீதும் இடம் பெற்றுள்ளன,

அமெரிக்க விமானத் தாக்குதல்கள் பற்றி குறிப்பிடும் தொடர்புச் சாதனங்கள் வெள்ளை மாளிகையினதும் நேட்டோ அதிகார சபையினதும் பிரச்சாரங்களை திரும்பவும் வாந்தி எடுத்தனவே தவிர உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பற்றி எதுவும் குறிப்பிடவோ அல்லது குண்டு வீச்சால் அழிந்த பகுதிகளின் படங்களை காட்டவோ இல்லை. இவை ஒரு ''சமாதான முயற்சியாக'' இடம் பெறுகின்றன எனக் கூறும் கிளின்டன் ஆட்சியாளர்களின் அறிக்கைகளை மட்டுமே வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் வெளியிட்டன.

அமெரிக்க குண்டு வீச்சுக்கள் சனநெருக்கடி மிகுந்த நகரங்களையும், கிராமங்களையும் இலக்காகக் கொண்டிருந்தன. வீடுகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், பக்டரிகள் என்பன அமெரிக்க குண்டுகளாலும் ஏவுகணைகளாலும் தாக்கப்பட்டன, சேர்பிய தகவல்களின்படி 1000 க்கும் அதிகமானோர் இறந்துள்ளதோடு இதில் 60 வீதத்துக்கும் அதிகமானோர் பொது மக்கள்.

இந்நூற்றாண்டில் சேர்பிய பொதுஜனங்கள் ஒரு வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்தியின் இராணுவத் தாக்குதலுக்கு மூன்றாவது தடவையாக இலக்காகி உள்ளனர். முதலாம் உலக யுத்தத்தில் சேர்பியா அதன் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கை இழந்தது. இது ஆஸ்திரியாவுக்கும் ஹங்கேரிக்கும் ஜேர்மனிக்கும் எதிரான ஈடிணையற்ற போராட்டத்தினால் ஏற்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தில் யூகோசலாவியா ஜேர்மனி இத்தாலியினாலும் குரோஷியாவில் இருந்த நாசி ஆதரவு உஷ்டாசே ஆட்சியினாலும் ஆக்கிரமிக்கப்பட்டது, இவை பொஸ்னிய சேர்பியர்களுக்கு எதிரான ஒரு இனப்படுகொலை யுத்தத்தை நடாத்தின.

அமெரிக்காவின் தலைமையிலான இன்றைய யுத்தத்தில் ஜேர்மன் ரொர்தாடோ யுத்த விமானங்கள் யுத்த ஆதரவு வழங்கத் தருவிக்கப்பட்டுள்ளன, நாஸி அரசாங்கம் வீழ்ச்சி கண்டதன் பின்னர் ஒரு எதிர்த் தாக்குதலில் ஜேர்மன் விமானம் பயன்படுத்தப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

நேட்டோ குண்டுவீச்சுக்கான உடனடிக் காரணமாக சரஜீவோவில் இடம் பெற்ற ஷெல் அடியில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்தது. பொஸ்னிய சேர்பியர்கள் இந்த அட்டூழியங்களுக்கு தாம் பொறுப்பு இல்லை எனவும் முஸ்லீம்களின் தலைமையிலான அரசாங்கம் அமெரிக்க தலையீட்டுக்கு வழிவகுக்கும் விதத்தில் இதை நடாத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளது. 1994 பெப்ரவரியில் சரஜீவோவில் இடம்பெற்ற இத்தகைய ஒரு ஷெல் அடி முஸ்லீம் படைகளின் வேலை என்ற முடிவுக்கு ஐ.நா. சமாதானப் படைகள் வந்திருந்தன.

இந்த அட்டூழியங்களுக்கான பொறுப்பு யாராக இருப்பினும் இவை ஒரு இராணுவ மூலோபாயத்தின் அடிப்படையில் நீண்ட காலத்துக்கு முன்னரே தயார் செய்யப்பட்டதாகும், பெரும் ஏகாதிபத்திய சக்திகளே இந்த நெருக்கடிக்கு பொறுப்பாக இருந்து வந்துள்ளதோடு இதன் ஒவ்வொரு கட்டத்திலும் இனக்குழு மோதலை தூண்டிவிட செயற்பட்டுள்ளன, 1980பதுகளில் இவை சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக பிரமாண்டமான பொருளாதார சிக்கன கொள்கைகளை திணித்ததின் மூலம் யூகோசலாவிய பொருளாதாரத்தினை சிதறுண்டு போகச் செய்தன. வாழ்க்கைத் தரத்தை அரைப் பங்கால் வெட்டி வீழ்த்தியதோடு வேலையின்மையை பொருளாதார மந்தகால மட்டத்துக்கு கொணர்ந்தன, அன்று இவை உள்நாட்டு ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை ஆதரித்ததோடு முதலாளித்துவ தேசியவாதத்துக்கும் தூபமிட்டன.

இதன் பெறுபேறாக இலட்சக் கணக்கான யூகோசலாவிய பிரஜைகள் புதிய அரசுகளுள் ஒடுக்கப்படும் சிறுபான்மையினராக பரிணாமம் செய்யப்பட்டனர். குரோஷியாவில் சேர்பியர்களும், முஸ்லீம்களின் தலைமையிலான பொஸ்னியாவில் சேர்பியர்களும் குரோஷியர்களும் சுலோவினியாவில் பொஸ்னியன் சேர்பியன் தொழிலாளர்களும் பிளவுண்டு போயினர். பிரிந்து சென்ற இந்த குடியரசுகள் ஒவ்வொன்றும் வலதுசாரி தேசியவாத சோவினிச கட்சிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டன,

பொஸ்னிய சம்பவங்களில் இருந்து அனைத்துலக தொழிலாளர் வர்க்கம் நல்ல படிப்பினையை பெற்றாக வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய அமைப்பின் அனைத்துலக உறவுகள் சிதறுண்டு போய்விட்டன, இது முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு புதிய காலப்பகுதியை திறந்துவிட்டுள்ளது. முதலாளித்துவ இலாப முறையானது மீண்டும் இராணுவவாதத்துக்கும் யுத்தத்துக்கும் தூபம் போட்டுள்ளது.

ஒரு அரசியல் இயக்கத்தினை ஒருங்கமைப்பதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தினால் மட்டுமே இந்த இராணுவ அச்சுறுத்தல்களுக்கு பதில் அளிக்க முடியும், அதனால் மட்டுமே தேசிய எல்லைகளைத் தாண்டி முதலாளித்துவத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட குருட்டு சந்து பொந்துகளுக்கு அப்பால் ஒரு புரட்சிகர சோசலிச தீர்வினை முன்வைக்கும் விதத்தில் போராட்டங்களை ஐக்கியப் படுத்த முடியும். இன்று உலக விவகாரங்களில் ஆதிக்கம் புரியும் குழப்ப நிலைமை இறுதியில் இன்னொரு உலக யுத்தத்தில் போய் முடியும் அல்லது ஒரு சோசலிசப் புரட்சி மூலம் தீர்வு காணப்படும். தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு புதிய சோசலிச அனைத்துலக தலைமையை கட்டி எழுப்புவது இன்று தீர்க்கமானதாகியுள்ளது, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இப்பொறுப்புக்கு தோள்கொடுக்கின்றது.

---

## இனவெறி-பாசிச கூச்சல்களையிட்டு...

(2ம் பக்கச் தொடர்ச்சி)

மோசடி கோட்பாட்டு முகம் காட்டும் பாசிஸ்டுகள் மிகவும் அடிப்படையான ஜனநாயகப் பணிகளை தமது இனவாத நோக்கினை மூடி மறைக்கும் பொருட்டு சேற்றுள் தள்ளுவது இதில் தெரிகிறதல்லவா? இலங்கையிலும் சரி வேறெங்கும் சரி தேசிய இனங்களுக்கு இடையே சமத்துவமான உறவுகளை நிறுவுவது மிகவும் அடிப்படையான ஜனநாயகப் பணியாகும். இதனை நனவுபடைத்த தொழிலாளர்கள் அறிவர்.

பாசிஸ்டுகள் இன்னுமோர் சுலோகத்தையும் முன்வைத்து வருகின்றனர். ''அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமாக கருத்துக் கணிப்பை நடாத்து!''; அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் ஜனநாயக உரிமைகளை வழங்கும் பொருட்டு ஏற்பட்டவை அல்ல. வடக்கு-கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யும் யோசனைகள் நாடு முழுவதிலும் சிறுபான்மை தேசிய இனத்தினரின் மட்டுமன்றி பேரினத்தினதும் கருத்துக் கணிப்புக்கு உள்ளாக வேண்டும் என இவர்கள் கூறுகின்றார்கள். இந்த இலட்சணத்தில் இவர்கள் ஜனநாயகத்தின் சார்பில் பேசுகின்றார்கள் எனக் கூறுவது எப்படி? இந்த விதத்தில் இவர்கள் பேரினத்தின் உள்ளே இனவெறியைத் தூண்டிவிடவும் சிறுபான்மையினரை நசுக்கவும் பார்க்கின்றார்கள். இவர்கள் ஜனநாயகத்தின் பேரில் சிங்கள சோவினிசத்தினை தூண்டுகிறார்கள்.

இலங்கையில் சிங்கள பேரின முதலாளிகளின் தேசிய ஒடுக்குமுறையைப் பற்றியும் தமிழ் தேசிய இனத்தின் முதலாளிகள் பற்றியும் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்கள் கற்றுக்கொண்டது. முதலாளித்துவ பிரிவினை அரசியல்களுக்கு எதிராக இரு தரப்பிலும் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட. தொழிலாளர் இயக்கத்தினுள் இடம்பெற்ற போராட்டங்கள் மூலமாகும். இலங்கையில் இதற்கு தலைசிறந்த வரலாற்று சம்பிரதாயங்கள் உண்டு. 1930களின் கடைப்பகுதியில் தொழிலாளர் வர்க்கம் சமசமாஜக் கட்சியின் கீழ் அணிதிரண்ட போதும் 1940களில் அக்கட்சி ட்ரொட்ஸ்கிச மார்க்சிசக் கட்சியாக முன்னணிக்கு வந்த போதும் 1950களில் அதன் ஆளுமை பரந்து பட்டு இருந்த வேளையிலும் இலங்கையின் முதலாளிகளின் இன,மத பேதங்களை தாண்டி தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகவாத அடிப்படையில் அணிதிரண்டது. இதைக் கண்டு கலங்கிப் போன முதலாளிகள் இனவாத பிளவின் கொலைகார ஆயுதம் ஏந்தினர். ஏகாதிபத்திய எஜமானர்கள் அவர்களுக்கு உரித்தாக்கிய கடைகெட்ட ஆயுதம் அதுவே. எனினும் அன்று தொழிலாளர் வர்க்கம் சிங்கள முதலாளிகளின் இனவாதத்தை எதிர்த்துப் போராடியது. 1958ல் கொழும்பு வாழ் தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் தாக்க சிங்கள இனவாதிகள் வீதியில் இறங்கிய வேளையில் சமசமாஜக் கட்சி தனது கிளைகளின் அங்கத்தவர்களை திரட்டி தமிழ் ஒடுக்கப்படும் மக்களை பாதுகாக்க இறங்கியது. 1950களில் சமசமாஜக் கட்சி முதலாளித்துவத்துக்கு அடிபணிந்து 1964ல் சி.ல.சு.க. கூட்டரசாங்கத்தில் நுழைந்ததன் மூலம் இப்போராட்டங்கள் சீர்குலைந்தன. இதனால் இது 1983ல் இனவாத யுத்தமாக வளர்ச்சி காணும் நிலை உருவாகியது. கடந்த காலத்தின் அனைத்துலகவாத சம்பிரதாயங்களின் அடிப்படையில் காலூன்றி சிங்களம்—தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை சிருஷ்டிக்குமாறும், அதன் மூலம் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி பொதுஜன முன்னணி, பாசிச இனவாத கும்பல்கள் விருத்தி செய்யும் எதிர்ப்புரட்சி ஆபத்துக்களுக்கு எதிராக அணிதிரளுமாறும் நாம் தொழிலாளர்களை வேண்டுகின்றோம்,

# விசேட அதிரடிப் படை படுகொலைகளின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தின் மூலம் பேரம்பேசுவதை இலங்கை முதலாளிகள் தமது எதிர்ப்புரட்சி சர்வாதிகார திட்டங்களில் இருந்து தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் கவனத்தையும் பார்வையையும் திசை திருப்ப பயன்படுத்திக் கொள்கிறார்கள், சிங்கள தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் இதன் மூலம் ஏமாந்து விடக் கூடாது.

## முதலாளித்துவ தொடர்பு சாதனங்கள்

முதலாளித்துவ பத்திரிகைகளும் தொடர்புச் சாதனங்களும் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதும் மனித உரிமைகளை காக்கும் அக்கறை மோசடியின் கீழ் அது பற்றிய செய்திகளை வெளியிட்ட போதும் அவை உண்மையில் பொதுமக்களின் கண்களில் மண் போட்டுள்ளன. கொலைகாரர்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்தது தான் தாமதம் அவை அரச படை அணிகளை அதற்கான பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கும் வெறியில் செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிட்டன. 'ஐலன்ட்' பத்திரிகை ''இந்த உளவுச் சேவை அதிகாரிகள் கொழும்பிலும் அளவையிலும் இடம் பெற்ற கொலைகளில் சம்பந்தப்படவில்லை என சீ.ஐ.டி. யினால் உறுதிசெய்யப்பட்டதும் இவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என இராணுவத்தினதும் விசேட அதிரடிப்படையினதும் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்''

(8/9/95)

அரசாங்கத்துக்கு ஒத்தூதும் ''ராவய'' பத்திரிகை, இது ஆயுதப் படைகளில் இருந்து ''மாபியா கும்பல்''களை முன்கூட்டியே அகற்றாததால் ஏற்பட்டது எனக் கூறி பொதுஜன முன்னணி அரசாங்கத்தை அதற்கான பொறுப்பில் இருந்து விடுதலை செய்ய முயன்றது.

ஜே.வீ.பி. காரர்கள் தமிழ் இளைஞர்களின் படுகொலைகளை சிங்கள சோவினிசத்துக்கு தூபம் போடப் பயன்படுத்தியுள்ளனர். ''...இக்கும்பல் கொலைகார ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இருந்த 'பிரா' கொலைகாரக் கும்பலில் அணிதிரண்டு இருந்த தமிழீழம் அமைப்புக்களின் தலைவர்களும் அங்கத்தவர்களும் ஆவர் என பொறுப்புடன் கூறுகின்றோம். யூ.என்.பி, கொலைகார ஆட்சியின் போது இவர்கள் வடக்கு–கிழக்கு அல்லது ஏனைய மாகாணங்களில் தேசபக்தி கொண்ட மக்களையும் ஜே,வீ,பி. தலைவர்களையும் அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் கொலைசெய்வதில் முன்னணியில் நின்றவர்கள்'' எனக் கூறி முழு கொலைகார அரச இயந்திரத்தினையும் முதலாளி வர்க்கத்தையும் இந்த தமிழ் இளைஞர் படுகொலைகளுக்கான பொறுப்பில் இருந்து முழுமனே தள்ளி வைக்கவும் இப்படுகொலைகளை நியாயப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. யூ.என்.பி. காலத்தில் இடம் பெற்ற ஒரு இலட்சம் இளைஞர்களதும் படுகொலைக்கு ''தமிழ் ஈழம் காரர்களே'' பொறுப்பு என்ற பிரச்சாரத்தினை முன்னெடுப்பதன் மூலம் இவர்கள் தமிழர் விரோத கொலைகார இனவாதத்தை தூண்டிவிடவும் கொலைகாரக் கும்பல்களுடன் தமது உறவை இறுக்கமாக்கிக் கொள்ளவும் முயன்றுள்ளனர்,

ஏகாதிபத்தியவாதிகள் பொதுஜன முன்னணி அரசாங்கம் ''மனித உரிமைகளைக் காப்பதில் முன்னேற்றமான சாதனை புரிந்துள்ளதாகக்'' கூறிக் கொள்வதன் மூலம் இப்பிற்போக்கு படுகொலை இயக்கத்தினை மேலும் முன்னெடுக்க முயன்றுள்ளனர். நாட்டுக்கு நாடு வளங்களையும் இலாபகரமான உழைப்பையும் சுரண்டும் நிலைமைகளை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை ஒழித்துக் கட்டும் பிற்போக்கு வேலைத்திட்டங்களை தூண்டி விட்டுள்ளன.

அரசாங்கத்தினுள் பதுங்கிக் கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகள் இந்த எதிர்ப்புரட்சி வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். அரசாங்கம் ''ஜனநாயக வெற்றியை'' ஈட்டிக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் நவசமசமாஜ கட்சி எதிர்ப் புரட்சி சக்திகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதை பூசிமெழுக முயற்சிக்கின்றது. மே 29ம் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மாத்தறையில் நடாத்திய கூட்டத்தின் மீது ''ஜனதா மித்துரோ'' என்ற பாசிசக் கும்பல் இராணுவ—பொலிஸ் கும்பலுடன் சேர்ந்து நடாத்திய தாக்குதல் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்ளுக்கு ஒரு புரட்சிகர தலைமை கிடைப்பதை தவிர்க்கும் முயற்சியாக விளங்கியது.

தமது அடிப்படை ஜனநாயக உரிமைகளை காக்கவும் அரச படைகளிடம் இருந்தும் கொலைகார கும்பல்களிடம் இருந்தும் தம்மைக் காக்கவும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் தயாராக வேண்டும். இனவாத யுத்தத்துக்கும் தென்மாகாணங்களில் தமிழ் ஒடுக்கப்கடும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கும் எதிராக கிளர்ந்து எழாமல் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைகளை பாதுகாக்க போராட முடியாது. சகல வேலைத்தலங்களிலும் தோட்டங்களிலும் தொழிலாளர் இந்தப் படுகொலைகளை கண்டிக்கின்றதும் இனவாத யுத்தத்துக்கு எதிராக நனவு பூர்வமாக கிளர்ந்து எழுகின்றதுமான அரசியல் இயக்கத்தை கட்டி எழுப்புவதில் ஈடுபடுவது அவசியம்.

இலங்கை — தமிழ்ழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலம் மட்டுமே கொலைகாரக் கும்பல்களையும் ஒடுக்குமுறை அரச படைகளையும் கலைக்க முடியும். இச்சகல பிரச்சினைகளும் இலங்கையில் இன்று வளர்ச்சி கண்டுவரும் அரசியல் நிலைமையினுள் திட்டவட்டமான முறையில் தலைதூக்கி உள்ளன, 1988—90ல் இளைஞர் படுகொலைகளை எதிர்[illegible]தும், இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் தொழில், வாழ்க்கைத்தரம் பேணவும், விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ பிரிவினைவாதத்துக்கு எதிராகவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேலைத்திட்டத்தினை முன்வைத்து போராடி வந்துள்ளது, இன்று அவ[illegible]றின் அவசியம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இ[illegible] சகல தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். பு.க.க.வில் சேர்ந்து அப்போராட்டத்தை முன்னெடுக்க இன்றே ஆயத்தமாக வேண்டும்.

# தோட்டத் துறையில் தனியார்மயத்துக்கு எதிரான போராட்டம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கும் தொழிற்சங்கங்களில் இருந்தும் சுயாதீனமான முறையில் தொழிலாளர்களை அணிதிரட்டுவதையும் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணையப் போராடுவதையும் இலாபம் கறக்கத் தாக்குதல் நடாத்தும் முதலாளி வர்க்கத்தில் இருந்து விடுபடும் பொருட்டு சகல அடிப்படை முதலாளித்துவக் கைத்தொழில்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்குவதையும் தொழிலாளர் வர்க்கம் தனது போராட்டத்தின் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் தனியார்மயத்தின் ஆபத்துக்கு முகம் கொடுத்துள்ள நாட்டின் ஏனைய துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுடனும் மற்றும் நலன்புரி சேவை, தொழில் வெட்டுக்கு முகம் கொடுத்துள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களுடனும் சேர்ந்து போராட்டத்தில் இறங்க வேண்டும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தொழிற்சங்கமான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் இப்போராட்டத்துக்கு தலைமை வழங்க தயாரா்க உள்ளன, தோட்டத்துறையில் சகல தோட்டகங்ளிலும் நடவடிக்கை குழுக்களை அமைத்துக் கொண்டு இதற்கான போராட்டத்தில் காலடி வைக்குமாறு நாம் தொழிலாளர்களை வேண்டுகின்றோம்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து அதனைப் புரட்சிக் கட்சியாக ஊர்ஜிதம் செய்வதன் மூலம் இப்போராட்டத்துக்கான தலைமையை வழங்கும்படி நாம் வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களை வேண்டுகின்றோம்,

# பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்துக்கு எதிராக பொலிஸ் தலையீடு

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தொழிற்சங்கமான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்துக்கு செப்டம்பர் 8ம் திகதி விஜயம் செய்த அட்டன் பொலிசார் சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி அயல்வாசிகளிடம் விசாரித்து உள்ளனர். தோட்ட தொழிலாளர்கள் இந்த சங்க அலுவலகத்துக்கு வருகின்றார்களா என பொலிசார் அவர்களிடம் வினாவியுள்ளனர்,

அவ்வாறே ஆகஸ்ட் 30ம் திகதி இச்சங்கத்தின் பென்மூர் டிவிசன் கிளை தலைவரான ஜீ.சிவனுவின் வீட்டுக்கு வந்த இரகசியப் பொலிசார் அவரிடம் சங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தகவல்கள் கேட்டனர். சங்கத்தினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள், மறியல்கள் சம்பந்தமாகவும் கேள்வி எழுப்பப்பட்டதாக தெரிகிறது.

பெ. தோ. கை, தொ. ச. வுக்கு எதிரான இந்த பொலிஸ் தலையீடுகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஜனநாயக ஒப்பாரிகளுக்கு பின்னணியில் வளர்ச்சி காணும் தொழிலாளர் விரோத ஒடுக்குமுறையைப் படுத்துகின்றது. அரசாங்கத்தினுள் பதுங்கிக் கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், இ.தொ,கா,, மலையக மக்கள் முன்னணி தலைமைகளின் பூரண ஒத்துழைப்புடனேயே இந்த தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் உக்கிரம் கண்டு வருகின்றன,


**தொழிலாளர் பாதை சந்தாதாரர் ஆகுங்கள்**

அஞ்சல் கட்டணம் உட்பட சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/50 3 மாதம் — ரூபா 25/50
6 மாதம் — ரூபா 51/- 1 வருடம் — ரூபா 102/-

அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-1



சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியை கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர்: ..............................................

விலாசம்; ..............................................

..............................................

இக் கூப்பனை நிரப்பியனுப்ப வேண்டிய முகவரி:
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல:90, மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு-10


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் தீபால் ஜயசேகரவினால் மஹரகம நாஹகவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது;